**2–11–2012**

**கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்**

**மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களது பதிலுரை**

பிற்பகல் **1–20**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தென்கோடியில், எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு அரசியல் முகவரி தந்து, நகரக் கழகச் செயலாளராக்கி, நகர் மன்றத் தலைவர் பொறுப்பு அளித்து, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராக்கி, மாவட்ட கழகச் செயலாளராக்கி, கழகத்தின் பொருளாளராக்கி, ஆட்சி அடையாளம் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சராக்கி, **2012–2013** ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்திடவும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்திடவும் பொன்னான வாய்ப்பினை எனக்களித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல கழகத் தொண்டர்களைக் காக்கும் காவல் தெய்வம். எதன்பொருட்டும், எவர் பொருட்டும் தமிழர் உரிமைகளை விட்டுத் தராத துணிவின் சின்னம். தீயசக்தியின் அரட்டல், உருட்டல், மிரட்டல்களை அஞ்சாது எதிர்கொண்டு அனைத்திலும் வெற்றிகொள்ளும் வீரத்திலகம். தேர்ந்த நிர்வாகத் திறனால் தமிழகத்தின் நிதி அமைப்பை அமுதசுரபி ஆக்கி, தீட்டிய தீட்டங்களுக்கு வேண்டிய நிதியை வள்ளலாய் வாரி வழங்கும் கருணையின் சிகரம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கடந்த **26–3–2012** அன்று **2012–2013** ஆம் ஆண்டிற்கான நிதிநிலை

அறிக்கையைத் தாக்கல் செய்து, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து அவற்றைத் திறம்பட நிறைவேற்றியும் வருகிறது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த பிறகு, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்குவதும், வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் இடம்பெறாத அதாவது, அதற்குப் பிறகு அறிவிக்கப்பட்ட புதிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் கூடுதல் நிதியை வழங்குவதும் இந்த முதல் துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும். அதன் அடிப்படையில் கடந்த 29–10–2012 அன்று இப்பேரவையில் ரூபாய் 5,617.14 கோடி கூடுதலாகத் தேவைப்படுகிறது எனவும், அதற்குரிய அனுமதியை பேரவை வழங்க வேண்டும் எனவும் கோரி முதல் துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 31–10–2012, 1–11–2012 மற்றும் இன்று ஆகிய மூன்று நாட்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், தே.மு.தி.க.–வைச் சார்ந்த உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)–ஐச் சார்ந்த உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் இதர கட்சிகளைச் சார்ந்த அனைத்து மான்ற மாண்புமிகு உறுப்பினர்களும் முதல் துணை மானியக் கோரிக்கைகளுக்கான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களது மேலான கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விவாதத்தில் பங்கேற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த பொருள்கள் குறித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அதற்கு சம்பந்தப்பட்ட துறைகளின் மாண்புமிகு அமைச்சர்கள் அவ்வப்போது உரிய பதிலைத் தெரிவித்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் தற்போதைய மின் நிலைமை

குறித்தும், இப்படிப்பட்ட நிலைமை உருவாக காரணகர்த்தா யார் என்றும், இந்த நிலைமையைச் சீர்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டு வரும் துரிதமான நடவடிக்கைகள் குறித்தும் தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூறினார்கள்.

இன்று தமிழகம் சந்தித்துவரும் மின் பற்றாக்குறைக்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்கின்ற வினாவிற்கு விளக்கம் அளிக்கின்ற தெம்போ, எடுத்து வைக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கின்ற திராணியோ இல்லாத காரணத்தால், இந்த அவையை விட்டு எப்படி வெளியேறலாம் என்று திட்டமிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) போரில் புறமுதுகிட்டு ஓடும் கோழைகளைப்போல நடந்துகொண்டார்கள்.

மகாகவி பாரதி சொன்னதைப்போல, கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்ற கூட்டமாய் இருக்கிறார்கள். காதுகள் இருக்கின்றன, ஆனால் கேட்க மறுக்கிறார்கள். Zero Hours–ல் பேசுகிறேன் என்று பேரவைத் தலைவரிடம் அனுமதி வாங்குவது, Adjournment Motion என்று தாவுவது; இது எந்த ஊர் சபை நாகரிகமோ அவர்களுக்கே அது வெளிச்சம்.

பிற்பகல் **1–25**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நேற்றைய தினம் இந்த அவையில் விதி **110**–ன்கீழ் அளித்த அறிக்கையில் எடுத்துக் கூறியதுபோல தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சி பெறும் வகையிலும், நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முனைப்பான நடவடிக்கைகளை

மேற்கொண்டு வருகிறது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபற்றிக் கூறும்பொழுது சர்வதேசப் புகழ்பெற்ற இந்திய மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 12 தொழில் நிறுவனங்கள் 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்திட உள்ளன என்றும், இதன்மூலம் 36 ஆயிரத்து 855 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் ஒரு இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்றும், மேற்படி 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எதிர்வரும் 5–11–2012 அன்று கையொப்பமிட உள்ளது என்றும் இப்பேரவையில் நேற்று அறிவித்தபோது, தமிழகத்தின் நலம் நாடும் நல்ல உள்ளங்கள் எல்லாம் மகிழ்ச்சியில் திளைத்தன. குறிப்பாக, வேலைவாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இளைய சமுதாயம் ஆனந்தக் கூத்தாடியது என்று சொன்னால் அது மிகை ஆகாது. ஒரே நாளில் தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய தொகையை முதலீடு செய்யும் வகையில், இத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடும் இந்த சாதனை, கின்னஸ் புத்தகத்திலே இடம்பெறும் மகத்தான சாதனை என்பதை மிகுந்த பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசாங்கத்தின் அச்சாணியாக விளங்குகிற அரசு ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அவர்களுக்கான வீடுகட்டும் முன்பணக் கடனை 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சமாக உயர்த்தினார்கள். பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், அரசுப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை மேம்படுத்தி அவர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் பயன் அடையும் வண்ணம், அதற்கென வழங்கப்படும் நிதி உதவியை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, அந்த அளவிற்கு உட்பட்டு எத்தனை முறை வேண்டுமானாலும் சிகிச்சை பெற்றுக்கொள்ள வழி வகுத்துள்ளார். அண்மையில்

மத்திய அரசு அதன் ஊழியர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தியவுடன் மாண்புமிகு அம்மா அவர்களும், சற்றும் தாமதமின்றி தமிழக அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்.

அதுமட்டுமின்றி, 25 ஆண்டுகாலம் அப்பழுக்கற்ற பணியை முடித்த அரசு ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த வெகுமானத் தொகை 500 ரூபாயை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதோடு மட்டுமின்றி, அத்தொகை ரொக்கமாக வழங்கப்படும் என்று நேற்றைய தினம் இந்த அவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

மேலும், அவர்களுக்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தை 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அரசு ஊழியர்களின் நலனையும் காக்கும் நல்லரசு என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மற்றும் துணை மதிப்பீடுகள் மீது 180 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ளனர். அவை அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் பேசும்போது இந்த முதல் துணை மானியக் கோரிக்கையில் 51 துறைகள் சம்பந்தமாக ரூபாய் 5617.14 கோடி கோரப்பட்டுள்ளது என்றும், 515 திட்டங்களில் 128 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுதலாக நிதி கோரப்பட்டுள்ளது என்றும், 54 அரசுத் துறைகளில் 35 துறைகள் 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதியை விட இந்த ஆறு மாத கால அளவிலேயே அரையாண்டுக்கான ஒதுக்கீட்டினைவிட கூடுதலாக செலவிட்டுள்ளன என்றும்,

ரூபாய் 3,501 கோடி ஒதுக்கீடு பெற்றுள்ள, மடிக்கணினி போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் மிக முக்கிய துறைகளான சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, ரூபாய் 222 கோடி ஒதுக்கீடு பெற்றுள்ள சுற்றுச் சூழல் துறை, ரூபாய் 18 கோடி ஒதுக்கீடு பெற்றுள்ள மாநில சட்டமன்றம் ஆகிய துறைகள் கூடுதல் நிதி கோரி எந்த அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லையென்றும் அது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப் போல் துணை மானியக் கோரிக்கை என்பது எல்லாத் துறைகளிலும் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. எந்தெந்த துறைகளுக்குக் கூடுதல் நிதி தேவைப்படுகிறதோ, அந்தத் துறைகளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுவது அவசியம்.

இந்த மூன்று துறைகள் கூடுதல் நிதி கோரவில்லை என்றால், அந்தத் துறைகளுக்கு கூடுதல் நிதி தேவைப்படவில்லை என்பதுதான் பொருள். அதை, ஒரு குறையாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல், 35 துறைகளில், முதல் அரையாண்டில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது என்றால், அந்தத் துறை செயல்படுத்தும் திட்டங்களில் மாதாந்திர வாரியாக நிதித் தேவையைப் பொறுத்தே செலவினம் அமையும்.

உதாரணமாக எரிசக்தித் துறையைப் பொறுத்தமட்டில், மின்சார வாரியத்தின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட முழு மானியத்தையும் அத்துறைக்கு முன்னரே வழங்கியதால்தான் அரையாண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

அதேபோல, பல திட்டங்களில் முதல் அரையாண்டிலேயே, நிதி கணிசமாக செலவழிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அந்தத் துறைகளில் கூடுதலாக

செலவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனினும், ஆண்டு இறுதியில் துறை வாரியாக, தலைப்பு வாரியாக நிதி ஒதுக்கீடு, செலவு, தேவை ஆகியவை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, இறுதி துறை மானிய கோரிக்கையில் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு சரி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக திரு. பாண்டியராஜன் அவர்கள் பேசுகிறபோது, ஏற்கெனவே உள்ள நிதிப் பற்றாக்குறையான ரூ.19,832 கோடியில், பெறப்படும் கடன் ரூ.18,389 கோடி என்ற நிலையில், துணை மானியக் கோரிக்கையில் அனுமதிக்கப்படும் ரூ.5617.14 கோடியையும் சேர்த்தால், நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் ஐந்து சதவீதத்தை தாண்டிவிடும் என்றும், இதனால் ஏற்படும் கூடுதல் கடன் ரூ.31,232 கோடியை எட்டி அதன் அளவும் மாநில உற்பத்தி மதிப்பில் நிதி நிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் குறியீட்டினை மீறுவதோடு, வட்டிப் பளு மட்டும் ஆண்டிற்கு ரூ.15,000 கோடியை தாண்டும் எனவும், இவ்வாறு அதிக கடன் சுமையை அரசு எப்படி தாங்கும்? என்றும் கேட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துவக்க உரையிலேயே, தற்போது துணை மானிய கோரிக்கையில் கேரப்பட்டுள்ள ரூ.5,617.14 கோடியை வணிக வரி மற்றும் கலால் வரி ஆகியவற்றில் ஏற்கெனவே கணிக்கப்பட்ட அளவைவிட, கூடுதலாக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்றும், அந்தக் கூடுதல் நிதி ஆதாரத்தைக் கொண்டும், செலவினங்களை கட்டுப்படுத்தியும் இந்தக் கூடுதல் நிதி தேவை பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு 2013–2013 ஆம் ஆண்டிற்கு, தமிழக அரசு கடன் பெற அனுமதித்துள்ள அளவு ரூ.20,716 கோடி என்றாலும், வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.18,387.47 கோடி அளவே கடன் பெற நாம் உத்தேசித்துள்ளோம். மின்சார பகிர்மான கழகத்திற்கு வழங்கப்படும் கூடுதல் நிதி உதவியையும்

கணக்கில் கொண்டாலும் கூடுதலாகக் கடன் பெறாமல் அரசின் நிதித் தேவையை நிறைவு செய்யவே மாண்புமிகு அம்மாவின் அரசு முயன்று வருகிறது.

ஒருவேளை, சிறிது கூடுதல் கடன் பெற வேண்டி இருந்தாலும் அதுகூட மத்திய அரசு விதித்துள்ள அளவுக்குள் மட்டுமே இருக்கும் என்பதையும், அது நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் கடன் குறியீட்டு அளவான, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 24,8 சதவீதம் என்ற அளவிற்குள் கட்டுப்படுத்தப்படும் என்பதையும் நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்படும் என்பதையும் இங்கே நான் தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

எனவே, இந்த நிதியாண்டு நிறைவு பெறும் வரை திரு. பாண்டியராஜன் அவர்கள் பொறுமை காத்து, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எவ்வாறு பொறுப்போடு நிதியைக் கையாண்டு நிர்வகிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதல் துணை மானிய கோரிக்கையில் தற்போது கோரியுள்ள ரூ.5,617.14 கோடியில் மின்சார வாரியத்திற்கு மட்டுமே ரூ.4,249 கோடி என்பதை மாமன்ற உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் சுட்டிக்காட்டி, மத்திய அரசு அனுமதித்துள்ள ரூ.1,20,000 கோடிக்கான கடன் சீரமைப்பு திட்டத்தில், இந்த உதவி வழங்கப்படுவதாகவும், ஏற்கெனவே மின்சார வாரியத்தை மூன்று நிறுவனங்களாக பிரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முடிவு பெறாத நிலையில் இது ஒரு வீணான செலவு எனவும் விழலுக்கு இழைத்த நீர் எனவும் இங்கே குறிப்பிட்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரை எந்தத் துறைக்கு எந்தப் பணிகளுக்கு நிதி அவசியம் தேவைப்படுகிறதோ அதை உரியவாறு வழங்கவேண்டும் என்பதை முறையாக செய்து வருகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் **1–35**

இன்றைய நிலையில் தமிழகத்தில் பெரும் சவாலாக உள்ளது மின்சாரம் பற்றிய பிரச்சினைதான். இதற்கு விரைவில் ஒரு நிரந்தரத் தீர்வு கண்டு தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அயராது பாடுபட்டு வருகிறார். எனவேதான் மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கூடுதல் நிதியை கோரியுள்ளோம். இந்த நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற ரூ.4,086 கோடியில், ரூ.1,000 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. ரூ.1,086.25 கோடி மின்சார வாரியத்திற்குக் கூடுதலாக வழங்க வேண்டிய மானியத் தொகையாகும். மத்திய அரசு கடன் சீரமைப்புத் திட்டத்தை ரூ.1,20,000 கோடிக்கு செயல்படுத்த உள்ளதாக பத்திரிகைகளிலும் செய்தி வந்துள்ளது. ஒரு சில உறுப்பினர்களும்கூட இதைத் தெரிவித்தார்கள். ஏதோ, மத்திய அரசு இந்த ரூ.1,20,000 கோடியை வழங்குவதுபோல் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், இந்த ரூ.1,20,000 கோடி என்பது கடன் சுமையில் மூழ்கியிருக்கும் ஏழு மாநிலங்களைச் சார்ந்த மின் உற்பத்திக் கழகங்களின் மொத்த குறுகிய காலகடன் அளவுதான். அதாவது இந்த ரூ.1,20,000 கோடி என்பது ஏழு மாநிலங்களைச் சார்ந்த மின் உற்பத்திக் கழகங்களின் மொத்த குறியீடு ஆகும். இதில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் குறுகிய காலக் கடன் அளவு அசல் மட்டும் ரூ.19,146 கோடி ஆகும். இதையெல்லாம் நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நீர்வாக சீர்கேட்டால் குறுகியகால கடன் மட்டும் ரூ.19,146 கோடி. மொத்த கடன் எவ்வளவு? இந்த ரூ.19,146 கோடி இல்லாமல் ரூ.43,829 கோடி ரூபாய். இதுமட்டுமல்லாமல் பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு அவர்கள் ஆட்சியைவிட்டு செல்லும்போது பெல் நிறுவனத்திற்கு செட்டில்மென்ட் செய்யாமல் பாக்கி வைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். இதுதான்

கடந்த தி.மு.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேடு என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதனை மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சந்தர்பங்களில் நமக்கு இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். 1957–லிலிருந்து 2006 வரை ரூ.9,326 கோடி தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடனாக இருந்தது. இந்த ரூ.9,326 கோடி கடந்த தி.மு.க. ஆட்சியான 2006 முதல் 2011 வரை ரூ.44,503 கோடியாக கடன் அளவு உயர்ந்திருக்கின்றது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த நான் இங்கே கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்காது. ரூ.1,27,000 கோடி என்று மத்திய அரசு ஏழு மாநிலங்களுக்கு அறிவித்திருக்கிறது. இந்த நிதியையும் மத்திய அரசு வழங்காது. பின் எப்படி வழங்குகிறது? இந்த குறுகிய காலக் கடன் சுமையில் 50 சதவீத கடனை அதாவது ரூ.9,573 கோடியை மாநில அரசே ஏற்றுக்கொண்டால், அதில் அசல் தொகைக்கு மட்டும் 25 சதவீதம் மத்திய அரசு வழங்குகிறது. அதாவது, மொத்தம் ரூ.19,000 கோடி ரூபாயில் 9,573 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்றுக்கொண்டால், அந்த 9,573 கோடியில் 25 சதவிகிதம். அப்படி என்றால் எவ்வளவு 2,375 கோடி ரூபாய். இதுதான் மத்திய அரசு வழங்குகின்ற உதவி. இது ஏதோ 1,20,000 கோடியை மத்திய அரசு வழங்குவதாக நாம் நினைத்துக்கொண்டு இங்கே மாமன்ற உறுப்பினர்கள் அதனை மூலதனச் செலவிற்குக்கூட பயன்படுத்தலாம் என்றுகூட நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். அதன்பிறகு நீங்கள் கடைசியில் பேசுங்கள். பின்னர் அந்த 50 சதவிகிதத்தில் அதற்குரிய அசல் மட்டும்தான் மத்திய அரசு தருகிறது. அதற்குரிய வட்டியையும் மாநில அரசுதான் செலுத்த வேண்டும் என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இந்தக் கடன் சுமை முழுவதையும் ஏதோ மத்திய அரசு அப்படியே ஏற்றுக் கொள்வதைப்போல் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி பத்திரிகைகளில் செய்தி வெளிவருவதும், அதனடிப்படையில் மாமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுவதும் நமக்கு வியப்பாக உள்ளது என்பதையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். ஆனால் அவர்கள் அசலை திரும்ப செலுத்த மூன்றுகால அவகாசங்கள் கிடைக்கும். அதாவது, மாநில அரசு ஏற்றுக்கொண்டது போக மீதி உள்ள 50 சதவீத கடனை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமே பொறுப்பேற்க வேண்டும். 100 சதவிகிதம் இருக்கின்ற கடனில் 50—ல் 25 சதவிகிதம் மத்திய அரசு கொடுக்கும் மீதியை மாநில அரசு ஏற்கும்.

பிற்பகல் 1—40

நிதி மறு சீரமைப்பு மத்திய அரசினுடைய திட்டம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த 50 சதவீத கடனை மாநில அரசே ஏற்கும் என்பதை ஏற்கெனவே அறிவித்து விட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மொத்த குறுகிய கால கடனாக 19,142 கோடியில் மாநில அரசு ஏற்றுக்கொள்ளவேண்டிய 50 சதவீதமான ரூபாய் 9,573 கோடியை நிதிநிலை பொறுப்புடைமை சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு ஒரே ஆண்டில் மாநில அரசே திரும்பச் செலுத்துவது என்பது இயலாத காரியம் என்பதால் இந்த ஆண்டு ரூபாய் 2,000 கோடி மட்டும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மீதித் தொகை அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி சீரமைப்பு நடவடிக்கைகளுக்கும் மின்சார வாரியத்தை மூன்றாக பிரிப்பதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. நேற்று முதல்நாள் திரு. பாண்டியராஜன் பேசும்போது இந்த இரண்டையும் போட்டு குழப்பிக்கொண்டிருந்தார். மறு சீரமைப்பையும் இந்த மின்சார வாரியத்தைப் பிரிப்பதையும் இரண்டையும் போட்டு மாற்றி மாற்றி பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு நான் தெளிவாக கூறுகின்றேன். மின்சார வாரியத்தைப் பிரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும். நிதி சீரமைப்பிற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எழுப்பிய கருத்துகளில் முக்கியமாக மின்சார பிரச்சினை எதிரொலித்தது. இதற்கான நீண்ட விளக்கத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த அவையிலே அளித்துள்ளார்கள்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதி, தொலைநோக்குடன் செயல்பட தவறியதாலும், மின் உற்பத்திக்கான தொலைநோக்கு திட்டங்களைத் தீட்ட அக்கறை காட்டாத காரணத்தாலும், நீண்டகால மின்சார கொள்முதலுக்கான ஒப்பந்தங்களைப் போடத் தவறியதாலும், தற்போது தமிழகத்தில் கடுமையான மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தக்க ஆதாரங்களுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மின் பற்றாக்குறையை முழுமையாக நீக்கிடும் வகையில் மாணபுமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டு வருகின்ற பல்வேறு புதிய திட்டங்களைப் பற்றி தெளிவாக மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான பல திட்டங்களை விரைவுபடுத்தும் அதே நேரத்தில் மின்சார சேமிப்பை ஊக்கப்படுத்தவும், மாற்று

எரிசக்தி வாய்ப்புகளை உருவாக்கவும், சூரிய எரிசக்தி உற்பத்தியைப் பெருக்கும் புதிய கொள்கையை 27—10—2012 அன்று வெளியிட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இங்கே நினைவுகூர்ந்தார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கு ஓர் உறுதியை அளித்திருக்கிறார்கள். 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தமின்வெட்டு அறவே நீக்கப்படும் என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்தில் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு அளித்த உறுதிமொழியை நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினை மின் வெட்டு இல்லாத மாநிலமாக மட்டுமல்ல, மின் மிகை மாநிலமாகவும் மாற்றிக்காட்டுவார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கைத்தறி துறைக்கு எவ்வாறு 197 கோடி ரூபாய் அரசுக்கு அவசர கூடுதல் செலவு ஏற்பட்டது என்று கூறினார். வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 268 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியைக்கொண்டு தற்போதைய விலை நிலவரப்படி வேட்டி, சேலை வாங்கி வழங்க இயலாது என்பதால் ஏற்கெனவே வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுடன் கூடுதலாக ஏற்படவுள்ள செலவிற்கு 94 கோடி ரூபாயும், கரூர் டெக்ஸ்டைல் பார்க் அமைக்க 15,99,00,000 ரூபாயும், கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கும் மின்சார மானியத்திற்கு கூடுதலாக 93,80,00,000 ரூபாயும், இன்னும் ஓரிரு கூடுதல் இனங்களுக்கும் சேர்த்து மொத்தம் இந்த

மானியத்தில் 97.57 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

'நீலம்' புயலுக்கு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்கள். மாநில பேரிடம் நிவாரண நிதி 2012–2013 ஆம் ஆண்டிற்கு 323 கோடியே 61 இலட்சம் ரூபாய் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதிலிருந்து உடனடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. சேதாரம் கூடுதலாக இருந்தால் அதற்கான நிதி தேவைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நேரத்தில், உரிய நிதியை ஒதுக்கீடு செய்வார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எத்தனையோ திட்டங்களை அறிவித்து அவற்றை செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள்.

பிற்பகல் 1–45

கடுமையான பிரச்சினைகளுக்கு இடையிலும் நிதி ஆதாரம் திரட்டி எந்த ஒரு திட்டத்திற்கும் நிதிப் பற்றாக்குறை என்பது இல்லாமல் கவனமாக செயல்பட்டு வருகிறார்கள். குறிப்பாக கல்வி, மருத்தும், சமூக நலன், விவசாயம், கால்நடை, ஊரக வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, மீன்வளத்துறை போன்ற பல முக்கிய துறைகளுக்கு அதிகளவிற்கு நிதியை ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திறம்பட செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே நான் பெருமையாக கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை பெருமைப்படுத்தும் கடமையைச் செய்வதில் தமிழக மக்களை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் ஒருநாளும், ஒருபோதும் சோர்வடையமாட்டேன் என்று

சூளுரைத்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் பகைவர்களை வேரறுத்து தமிழகத்தை மேம்படுத்தி தமிழ் இனத்தை முன்னேற்றவும் தமிழகம் இதுவரை காணாத உயர்ந்த நிலையை உண்ணத நிலையை அடைந்திடவும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்கள். ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாய் பிற மாநிலங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் தமிழகத்தில் நடைபெற்று வரும் பொற்கால ஆட்சியை உலகமே உற்று நோக்கும் வல்லரசாய் இந்திய மக்கள் புகழ்ந்து பேசும் நல்லரசாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே மிக விரைவில் மத்திய அரசு மலரும் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பாரதம் உருவாகும், உருவாகும், உருவாகும் என சொல்லி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எனது விளக்கங்களை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று இந்த முதல் துணை மானியக் கோரிக்கையை இம்மாமன்றம் அனுமதித்து தேவையான கூடுதல் நிதியை ஒதுக்கிட வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன் நன்றி, வணக்கம். (குறுக்கீடு)